# டைட்டன் கம்பெனி லிமிடெட்

சி ஐ என்: L74999TZ1984PLC001456
பதிவு அலுவலகம்: 3, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ், ஓசூர் 635 126, தமிழ்நாடு
கார்ப்பரேட் அலுவலகம்: "இன்டகிரிட்டி" எண் 193, வீரசந்திரா, எலக்ட்ரானிக்ஸ் சிட்டி பி ஓ,
ஓசூர் மெயின் ரோடுக்கு அப்பால், பெங்களூரு - 560 100, கர்நாடகா
இ-மெயில்: investor@titan.co.in ஃபோன்: +91-80-6704 7000
இணையதளம்: www.titancompany.in

A TATA Enterprise

## பொது அறிவிப்பு - 37வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் இ-வோட்டிங் தகவல்

நிலவி வரும் கோவிட்-19 பேண்டமிக் சூழ்நிலை காரணமாக, டைட்டன் கம்பெனி லிமிடெட் ("கம்பெனி") நிறுவனத்தின் 37வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் ("ஏ ஜி எம்" / "கூட்டம்"), மினிஸ்ட்ரி ஆஃப் கார்ப்பரேட் அஃபேர்ஸ் அமைச்சகம் வெளியிட்ட ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020, மே 5, 2020 மற்றும் ஜனவரி 13, 2021 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கைகள் ("எம் சி ஏ சுற்றறிக்கைகள்") மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா வெளியிட்ட மே 12, 2020 மற்றும் ஜனவரி 15, 2021 தேதியிட்ட சுற்றறிக்கைகளுடன் ("SEBI சுற்றறிக்கைகள்") படிக்கப்பட்ட, நிறுவனச் சட்டம், 2013 மற்றும் அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள விதிகளின் பொருத்தமான விதிகளுக்கிணங்க வீடியோ கான்ஃபரன்சிங் ("வி சி") / மற்ற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ("ஓ ஏ வி எம்") மூலமாக கூட்டப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

நிறுவன உறுப்பினர்களின் 37வது ஏ ஜி எம் கூட்டம், **ஆகஸ்ட் 2, 2021, திங்கட்கிழமை அன்று, மதியம் 2.30 (ஐ எஸ் டி) மணிக்கு**, ஏ ஜி எம் கூட்டத்தை கூட்டுவதற்கான அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி பிசினஸ் பரிவர்த்தனை நடத்த நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("என் எஸ் டி எல்") வழங்கும் வி சி / ஓ ஏ வி எம் வசதியின் மூலமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஏ ஜி எம்-ன் அறிவிப்பு, நிதி அறிக்கைகள் மற்றும் இதர சட்டபூர்வ அறிக்கைகளுடன், 2020-21 நிதியாண்டுக்கான நிறுவனத்தின் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையின் இ-நகல், நிறுவனத்தின் இணையதளமான www.titancompany.in என்பதில் மற்றும் என் எஸ் டி எல்-ன் இணையதளமான www.evoting.nsdl.com என்பதில் கிடைக்கப்பெறும். கூடுதலாக, ஏ ஜி எம் கூட்டத்தின் அறிவிப்பு, நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளின் இணையதளங்களிலும், அதாவது www.nseindia.com மற்றும் www.bseindia.com ஆகியவற்றிலும் கிடைக்கப்பெறும்.

உறுப்பினர்கள், ஏ ஜி எம் கூட்டத்தில் வி சி / ஓ ஏ வி எம் வசதியின் மூலமாக மட்டுமே கலந்து கொண்டு பங்கேற்க முடியும். இதன் விபரங்கள், கூட்டத்துக்கான அறிவிப்பில் நிறுவனத்தால் வழங்கப்படும். அதன்படியாக, கோவிட்-19 தொடர்பாக அரசாங்க அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு இணங்கி நடப்பதை உறுதி செய்யும் வகையில், நிறுவனத்தின் 37வது ஏ ஜி எம்-ல் நேரடியாக வந்து கலந்து கொண்டு பங்கேற்க எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதை தயவுசெய்து கவனிக்கவும். நிறுவனச் சட்டம், 2013-ன் பிரிவு 103 என்பதன் கீழ் பங்கேற்பாளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படுவதை மதிப்பிடும் நோக்கத்திற்காக, வி சி / ஓ ஏ வி எம் மூலமாக கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.

நிறுவனம் / ரெஜிஸ்ட்ரார் மற்றும் டிரான்ஸ்ஃபர் ஏஜன்ட்டுகள் ("ரெஜிஸ்ட்ரார்") / டெபாசிட்டரி பார்ட்டிசிபன்ட்ஸ் ("டி பி-கள்") உடன் இ-மெயில் முகவரிகள் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு, ஏ ஜி எம்-ன் அறிவிப்பு, அத்துடன் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை 2020-21, மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும். **SEBI சுற்றறிக்கைகளின்படி, ஏ ஜி எம்-ன் அறிவிப்பு மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையின் காகித நகல்கள் எதுவும் எந்த உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்படமாட்டாது.** தங்களின் இ-மெயில் முகவரிகளை இன்னும் பதிவு செய்யாத உறுப்பினர்கள், மின்னஞ்சல் வாயிலாக ஏ ஜி எம்-ன் அறிவிப்பு மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையை பெறுவதற்காக மற்றும் இ-வோட்டிங் செய்வதற்கான யூசர் ஐ டி மற்றும் பாஸ்வேர்டைப் பெற, கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறையை பின்பற்றி, ஜூலை 23, 2021, வெள்ளிக்கிழமை, மாலை 5.00 மணிக்கு (ஐ எஸ் டி) முன் தங்கள் இ-மெயில் முகவரிகளை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

| | |
|---|---|
| a) | பார்க்க இணைப்பு: **https://tcpl.linkintime.co.in/EmailReg/Email_Register.html** |
| b) | டிராப்டவுன் பட்டியலிலிருந்து நிறுவனத்தின் பெயரை தேர்ந்தெடுக்கவும்: **டைட்டன் கம்பெனி லிமிடெட்** |
| c) | ஃபோலியோ எண். / டி பி ஐ டி, வாடிக்கையாளர் ஐ டி, பங்குதாரர் பெயர், PAN விபரங்கள், மொபைல் எண் மற்றும் இ-மெயில் முகவரி. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், தங்கள் பங்குச் சான்று எண்களில் ஒன்றை உள்ளிட்டு, PAN கார்டின் சுய கையெழுத்திட்ட நகல் ஒன்றையும், ஆதார் கார்டு அல்லது பாஸ்போர்ட் போன்ற முகவரிச் சான்றையும் மற்றும் தங்களின் பங்குச் சான்றின் முன்பக்கம் மற்றும் பின்பக்கத்தையும் பதிவேற்றம் செய்வது தேவைப்படும். |
| d) | மொபைல் எண் மற்றும் இ-மெயில் முகவரியில் ஒரு ஓ டி பி எண்ணை சிஸ்டம் அனுப்பும் |
| e) | மொபைல் எண் மற்றும் இ-மெயில் முகவரியில் பெற்ற ஓ டி பி எண்ணை உள்ளிட வேண்டும் |
| f) | ஏ ஜி எம் அறிவிப்பு, அத்துடன் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை 2020-21 மற்றும் இ-வோட்டிங் ஆதாரச் சான்றுகளை அனுப்பும் ஒரே நோக்கத்திற்காக இ-மெயில் முகவரியை சிஸ்டம் உறுதி செய்யும் |

ஏ ஜி எம் அறிவிப்பில் வரையறுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பாக ஏ ஜி எம்-க்கு முன் மின்னணு முறையில் தங்கள் வாக்குகளை பதிவு செய்வதற்காக தன் உறுப்பினர்கள் அனைவருக்கும், என் எஸ் டி எல்-ன் இ-வோட்டிங் ("ரிமோட் இ-வோட்டிங்") வசதியை வழங்குவதில் நிறுவனம் மகிழ்ச்சி கொள்கிறது. கூடுதலாக, கூட்டம் நடைபெறும் போதும் ரிமோட் இ-வோட்டிங் சிஸ்டம் மூலமாக வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்கும். ஏ ஜி எம் தொடங்கும் முன் / நடைபெறும் போது ரிமோட் இ-வோட்டிங் செய்வதற்கான விரிவான செயல்முறை, அறிவிப்பில் வழங்கப்படும்.

**எலக்ட்ரானிக் கிளியரிங் சர்வீஸ் அல்லது வேறு ஏதேனும் வழிகளில் தங்கள் வங்கிக் கணக்குகளில் டிவிடெண்டுகளை நேரடியாக பெறுவதற்கு தங்கள் வங்கி கணக்கு விபரங்களை புதுப்பிக்காத உறுப்பினர்கள், கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றலாம்:**

| | |
|---|---|
| **காகித வடிவில்** | வெள்ளிக்கிழமை, 23 ஜூலை 2021-க்குள் கீழ்க்கண்ட ஆவணங்களை நிறுவனத்தின் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்புமாறு உறுப்பினர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது:<br>a) உங்கள் பெயர், ஃபோலியோ எண், முழுமையான முகவரி குறிப்பிடப்பட்ட, கையெழுத்திட்ட ஒரு கோரிக்கை கடிதம் மற்றும் டிவிடெண்டு பெறப்போகும் வங்கி கணக்கு தொடர்பான கீழ்க்கண்ட விபரங்கள்:<br>i) வங்கி கிளையின் பெயர் மற்றும் வங்கி கணக்கு வகை;<br>ii) கோர் பேங்கிங் சல்யூஷன்ஸ் செயல்படுத்தப்பட்ட பிறகு உங்கள் வங்கியால் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண் மற்றும் வகை;<br>iii) 11 இலக்க ஐ எஃப் எஸ் சி குறியீடு<br>b) பங்குகள் ஜாயிண்ட்டாக இருந்தால், உறுப்பினர் அல்லது முதல் பங்குதாரரின் பெயர் தாங்கிய ஒரிஜினல் கேன்சல் செய்யப்பட்ட காசோலை;<br>c) PAN கார்டின் சுய-கையெழுத்திட்ட நகல்; மற்றும்<br>d) நிறுவனத்திடம் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, உறுப்பினரின் முகவரிக்கு ஆதாரச் சான்றாக ஏதேனும் ஆவணத்தின் (ஆதார் கார்டு, ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அட்டை, பாஸ்போர்ட்) சுய-கையெழுத்திட்ட நகல். |
| **டீமேட் வடிவில்** | டீமேட் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், அந்தந்த டி பி-களுடன் பதிவு செய்துள்ள தங்களின் எலெக்ட்ரானிக் பேங்க் மேண்டேட்டை புதுப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |

ஏதேனும் உறுப்பினரின் வங்கி விபரங்கள் இல்லாத பட்சத்தில், அத்தகைய உறுப்பினருக்கு, தற்போதைய கோவிட்-19 காரணமாக நிலவும் சூழல் இயல்பு நிலைக்கு திரும்பியவுடன் கூடிய விரைவில் அவருக்குரிய டிவிடெண்ட் வாரண்ட் / காசோலையை தபால் மூலம் நிறுவனம் அனுப்பி வைக்கும்.

நிதிச் சட்டம், 2020-ன் படி, உறுப்பினர்களின் டிவிடெண்ட் வருவாய் வருமான வரிக்கு உட்படுவதால், வருமான வரிச் சட்டம், 1961 ("ஐ டி சட்டம்") என்பதில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விகிதங்களில், உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் டிவிடெண்டிலிருந்து டேக்ஸ் அட் சோர்ஸ் ("TDS") வரி நிறுவனத்தால் கழிக்கப்பட வேண்டும். பொதுவாக, ஐ டி சட்டப்படி, டி டி எஸ் தேவைகளுக்கு இணங்க ஏதுவாக, உறுப்பினர்கள் தங்களின் குடியிருப்பு நிலை, PAN, பிரிவு ஆகியவற்றை தங்கள் டி பி-கள் உடன் முழுமைப்படுத்திக் கொள்ள மற்றும் / அல்லது புதுப்பித்துக் கொள்ள வேண்டும், அல்லது பங்குகள் நிறுவனம் / ரெஜிஸ்ட்ராரிடம் காகித வடிவில் இருக்கும் பட்சத்தில், தேவையான ஆவணங்களை PDF/JPG வடிவில் இ-மெயில் வழியாக சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது ஆவணங்களை https://tcpl.linkintime.co.in/formsreg/submission-of-form-15g-15h.html. என்ற இணைப்பில் பதிவேற்றம் செய்வதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

டைட்டன் கம்பெனி லிமிடெட் சார்பாக

தேதி: ஜூலை 2, 2021

இடம்: பெங்களூரு

தினேஷ் ஷெட்டி

ஜெனரல் கவுன்சல் மற்றும் கம்பெனி செக்ரட்டரி

Tanishq TITAN fastrack ZOYA SKINN TITAN EYEPLUS